(3) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் . கேள்வி எண் 1.

குடிநீர் வழங்கு திட்டங்கள்

*1. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பென்னலூர்பேட்டைத் தாலுகா வட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சியின் குடிநீர்த் திட்டம் தற்பொழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஊத்துக்கோட்டை பேரூராட்சிக்கு குடிநீர்த்திட்டம் அமைப்பதற்கான ஆய்வு மதிப்பீடு ஒன்று ரூ. 15,500க்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் அனுமதிக்கப்பட்டு இத்திட்டம் ஆய்வு நிலையில் உள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, அப்படி 15,000 ரூபாய் செலவில் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டம் எப்போது முடிவடையும்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1973 மார்ச் மாதத்தில் இந்தத் திட்டம் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*2 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Chief Minister be pleased to state :

(a) whether there is any proposal to take up a scheme to bring water of South Pennar from the Kodayalam dam (now under construction) in Hosur Block to Hosur town for drinking purposes; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) பல்வேறு நீர்வளங்களிலிருந்து நீரைக் கொண்டு வரும் வாய்ப்புகளைக் கருதிப் பார்த்து, ஓசூர் பேரூராட்சியில் நீர் வழங்கு திட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கான செயற்குறிப்பு ஆய்விலுள்ளது.